குறிக்கோள்

சிங்கப்பூர் ஊழியரணியைக் குடிபெயர்ந்த ஊழியர்கள் நிறைவு செய்ய, அவர்களின் நல்வாழ்வைப் பாதுகாக்க பங்குதாரர்களுடன் கூட்டிணைந்து செயல்படுதல்

தொலைநோக்கு

நம்பிக்கையும் ஈடுபாடும் உடைய மற்றும் பராமரிக்கப்பட்டு மதிக்கப்படும் குடிபெயர்ந்த ஊழியர் அணியை உள்ளடக்கும் சமூகம்

சமூக வழிகாட்டுதல்கள்

ஏஸ் (நம்கிக்கை, பராமரிப்பு மற்றும ஈடுபாடு) குழுமத்தின் அதிகாரப்பூர்வ ஃபேஸ்புக் பக்கத்தைப் பார்வையிட்டதற்கு நன்றி. இந்தப் பக்கத்தில் மற்ற பயனர்களுடன் தொடர்பு கொள்ளும்போது நமது சமூகத்தினர் பாதுகாப்பான உணர்வுடன் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எனவே, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சமூக வழிகாட்டுதல்களை நாங்கள் தொகுத்துள்ளோம். எங்கள் பக்கத்தில் என்னென்ன மாதிரியான பகிர்வுகள் அனுமதிக்கப்படும் என்பதையும், விதி மீறல்கள் ஏற்பட்டால் எவ்வகையான பதிவுகள் அகற்றப்படலாம் என்பதையும் இந்த வழிகாட்டுதல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்தப் பக்கத்தில் உங்கள் பங்களிப்பு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்

அர்த்தமுள்ள மற்றும் ஆக்கரமான விவாதங்களுக்கு இந்தப் பக்கத்தைப் பயன்படுத்தவும். உங்களின் கருத்துகளை நாங்கள் வரவேற்கும் அதே வேளையில், அவற்றை மரியாதையுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து மீண்டும் மீண்டும் அதே கருத்துகளை (அதாவது அங்கிலத்தில் ஸ்பேம் எனப்படும் தேவையற்றவை) மற்றும்/அல்லது பொருத்தமற்ற கருத்துகளைப் பதிவிட வேண்டாம். இதனால் நடந்து கொண்டிருக்கும் விவாதங்களுக்கு இடையூறு உண்டாகலாம் மற்றும்/அல்லது விவாதம் திசைதிருப்பப்படலாம்.

சக சமூக உறுப்பினர்களை மதிக்கவும்

எங்கள் பக்கத்தில் மற்ற பயனர்களுடன் ஈடுபட உங்களை வரவேற்கும் அதே வேளையில் மற்றவரின் உணர்ச்சிகளைக் கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம். பின்வருவன உட்பட, பிறரைப் புண்படுத்தும் எந்தவொரு பதிவையும் தவிர்ப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்தவும்:

- அவதூறான, மனதைப் புண்படுத்தும், ஆபாசமான அல்லது வன்முறையைத் தூண்டும் பதிவுகள்
- சமூகத்தின் மற்ற உறுப்பினர்களிடம் நாகரீகமற்ற அல்லது இழிவான கருத்துக்களைத் தெரிவிப்பது, எ.கா. பட்டப் பெயர் வைத்து அழைப்பது, தனிப்பட்ட விதத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்குவது அல்லது வேண்டுமென்றே விவாதங்களை சுமூகமாக நடக்கவிடாமல் செய்வது
- இனம், மதம், நாட்டுரிமை மற்றும்/அல்லது அரசியல் நம்பிக்கைகளைக் குறி வைத்து வெறுக்கத்தக்க அல்லது பாரபட்சமான கருத்துக்களைத் தெரிவிப்பது

இழிவான நடத்தையும் எங்கள் ஃபேஸ்புக் பக்கத்தில் பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது. மற்றவர்களை அச்சுறுத்தும் மற்றும்/அல்லது துன்புறுத்தும் பயனர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அவர்கள் மீது புகாரளிக்கப்படும்.

சட்டங்களுக்குக் கீழ்ப்படியவும்

அவதூறு, பதிப்புரிமை மற்றும் அறிவுசார் சொத்து மீறல் சட்டங்கள் உள்ளிட்ட, ஆனால் இவை மட்டுமல்லாத சட்டங்கள் சமூக ஊடகங்களில் பொருந்தும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உங்கள் பதிவு மற்றும்/அல்லது கருத்துகளில் இவை இடம்பெறக் கூடாது:

- உங்களை அல்லது மற்ற தனிநபர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் (ஒருவரை அடையாளம் காட்டக்கூடிய தகவல்கள், மின்னஞ்சல் முகவரிகள், தொலைபேசி எண்கள் மற்றும்/அல்லது வசிப்பிட முகவரிகள் உட்பட)
- தாம் வேறொரு நபர் என்றோ , ஓர் அமைப்பு, அரசாங்கம் அல்லது ஒரு நிறுவனத்தின் பிரதிநிதி என்று கூறும் தவறான தகவல்
- பதிப்புரிமை பெற்ற பொருள் (எழுத்துப்பூர்வ, ஆடியோ, வீடியோ மற்றும் இதர மின்னணு வடிவிலான) அல்லது அறிவுசார் சொத்து உரிமைகளை மீறல்
- ஒரு பொருள், வியாபாரம், நிறுவனம் அல்லது அமைப்பு ஆகியவற்றை அங்கீகரித்தல்
- ஒரு பொருள், வியாபாரம், நிறுவனம் அல்லது அமைப்பு ஆகியவற்றிற்கு ஆதரவளித்தல்
- பொருந்தாத அல்லது பொருத்தமற்ற பதிவு

மேலே உள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்காத கருத்துகளை/பயனர்களை அகற்றுவதற்கும் தடுப்பதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு.